இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அன்பின் நெருப்பு இல்லாவிட்டால், படைப்புகள் அவற்றின் அர்த்தத்தை இழந்து "ஆன்மாவின் மீது ஒரு சுமையாக" மாறும் என்றும், "அன்பு இருக்கும் இடத்தில் துக்கம் இல்லை" என்றும் கூறினார் திருத்தந்தை.

# இரக்கம், உண்மை என்னும் இரண்டு பாதைகளில் பயணிப்போம்


திருத்தந்தை பதினான்காம் லியோ (@VATICAN MEDIA)

நாம் மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக்கொண்ட துறவற வாழ்க்கையில் இறைவனைச் சந்திக்க, திருப்பயணிகளாக நாம் ஒரு பாதையில் இணைந்து நடக்க வேண்டும் வேண்டும் என்றும், பல பாதைகள் இருப்பது உண்மைதான், ஆனால் அவை அனைத்தும் இரண்டாகக் இரக்கம் மற்றும் உண்மை என்னும் இரண்டு பாதைகளாக நிறைவடைகின்றன என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அக்டோபர் 15, புதனன்று காலை மறைக்கல்வி உரைக்கு முன்பாக வத்திக்கான் னய ஆறாம் பவுல் அரங்கத்தில் உள்ள ஓர் அறையில் புனித அகுஸ்தீன் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றும் மெக்சிகன் கூட்டமைப்பின் அருள்சகோதரிகள் ஏறக்குறைய 40 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

நற்செய்தியில் இடம்பெறும் மார்த்தா மரியாவை சுட்டிக்காட்டி தனது கருத்துக்களை விளக்கிய திருத்தந்தை அவர்கள், மார்த்தாவைப் போல இரக்கச் செயல்கள் பல செய்வோம் என்றும் அல்லது மரியாவைப் போல இயேசுவின் பாதத்தில் அமர்ந்து உண்மையைப் பற்றி சிந்திக்கும் பணியினை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

வலேன்சியாவின் ஆயரும் திருத்னதர் பவுலும் நமக்குக் காட்டும் பாதை அன்பின் பாதை என்று கூறிய திருத்தந்தை அவர்கள், அன்பை விட எளிதான, இனிமையான ஏதாவது இருக்கிறதா? அன்பின் பாதை மிகவும் எளிதானது, அது கடவுள் மீதான அன்பாக இருந்தாலும் சரி அல்லது அண்டை வீட்டாரின் அன்பாக இருந்தாலும் சரி. அந்த பாதை எளிதானது! எவ்வளவு அழகாகவும் இனிமையாகவும் இருக்கிறது!" அதனால்தான் "இந்த பாதையின் வழியாகவே பலர் தங்களது இலக்கை அடைந்துள்ளனர் என்றும் கூறினார்.

அன்பு என்பது முயற்சியால் அடையக்கூடிய ஒன்றல்ல, மாறாக ஒரு கொடையாகப் பெறப்படுகிறது என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், புனித தாமஸ் அவர்களின் வரிகளான, "கடவுள் உங்களுக்கு எத்தனை விடயங்களைக் கொடுத்தாலும், அவர் தனது அன்பை உங்களுக்குக் கொடுக்கவில்லை என்றால், அவர் உங்களுக்குத் தன்னை கொடுக்க மறுத்துவிட்டார்" என்று பொருள் எனவும் கூறினார்.

அன்பின் நெருப்பு இல்லாவிட்டால், படைப்புகள் அவற்றின் அர்த்தத்தை இழந்து "ஆன்மாவின் மீது ஒரு சுமையாக" மாறும் என்றும், "அன்பு இருக்கும் இடத்தில் துக்கம் இல்லை" என்றும் கூறினார் திருத்தந்தை.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து பாடுபட வேண்டும்

உலகின் ஒவ்வொரு பகுதியிலும் அமைதியை மீண்டும் நிலைநாட்ட நாம் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்றும், நீதி, சமத்துவம் மற்றும் மக்களிடையே ஒத்துழைப்பு ஆகியவற்றின் கொள்கைகள், அதன் ஈடுசெய்ய முடியாத அடித்தளத்தை உருவாக்கும் கொள்கைகள் இன்னும் அதிகமாக வளர்க்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அக்டோபர் 14, செவ்வாயன்று உரோம் காலை 11 மணியளவில் இத்தாலிய அரசுத்தலைவர் சேர்ஜோ மத்தரெல்லா மற்றும் அரசு அதிகாரிகளை குயிரினாலெ எனப்படும் அரசு மாளிகையில் சந்தித்து உரையாற்றியபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

இத்தாலிய நிலத்தைச் சுற்றி அமைந்துள்ள எண்ணற்ற ஆலயங்கள் மற்றும் மணி கோபுரங்களில் பெரும்பாலும் கலை மற்றும் பக்தியின் உண்மையான புதையல்கள் மற்றும் அதன் அடையாளங்களை நாம் காண்கிறோம் என்றும், இதில் மக்களின் உள்ளார்ந்த படைப்பாற்றலானது, உண்மையான மற்றும் உறுதியான நம்பிக்கையுடன் ஒன்றிணைந்து, சிறந்த அழகின் சான்றை கலை வழியாக மட்டுமன்றி ஒழுக்கம் மற்றும் மனிதாபிமானம் வழியாகவும் நமக்கு வழங்கியுள்ளது என்றும் கூறினார் திருத்தந்தை.

இத்தாலிய நாடு தனது கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கும் புலம்பெயர்ந்தோருக்கு வழங்கும் தாராளமான உதவிக்கும், மனித கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் முயற்சிகளுக்கும் நன்றியைத் தெரிவித்த திருத்தந்தை அவர்கள், நமது காலத்தின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றான இதிலிருந்து இத்தாலி ஒருபோதும் பின்வாங்கவில்லை என்றும் கூறினார்.

இத்தாலி மகத்தான செல்வம் கொண்ட ஒரு நாடு எனவே நம்பிக்கையைப் பெறவும், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும், அனைத்து இத்தாலியர்களுக்கும் ஊக்கமூட்டுவதாக கூறினார் திருத்தந்தை.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# பெற்றோரை இழந்து வாடும் காசா சிறார் எண்ணிக்கை அதிகரிப்பு


காசா பகுதி சிறார் (AFP or licensors)

இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் குண்டுவெடிப்பு மற்றும் போர்ச்வழலானது, காசா பகுதி முழுவதும் பேரழிவு தரும் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது என்றும், 64,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்துள்ளனர் என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது யுனிசெஃப்.

வீடுகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும், அடிப்படைத் தேவைகள் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மனிதாபிமான தேவைகள் மிகப்பெரிய அளவில் உள்ளன என்றும் அவ்வறிக்கை எடுத்துரைத்துள்ளது.

காசா பகுதியின் சில பகுதிகளிலும், முழு நாட்டிலும் பஞ்சம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து வயதுக்குட்பட்ட மக்கள் தொகையில், 320,000 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர் என்றும், 56,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஒன்று அல்லது இரு பெற்றோரையும் இழந்துள்ளனர். அனைத்து குழந்தைகளும் அதிர்ச்சிகரமான சம்பவங்களையும் அவர்களின் கல்வியில் குறிப்பிடத்தக்க இடையூறுகளையும் சந்தித்துள்ளன என்று அறிக்கையானது சுட்டிக் காட்டியுள்ளது.

குளிர்காலம் நெருங்கி வருவதால், கடுமையான வானிலை மற்றும் உறைபனி வெப்பநிலையைச் சமாளிக்க குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான நேரம் குறைவாக உள்ளது என்றும், அனைத்து பாலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்யும் ஒரு நீடித்த அரசியல் தீர்வை அடைவதற்கான வாய்ப்பாக இந்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு UNICEF கட்சிகளை கடுமையாக வலியுறுத்துகிறது.

கூடாரங்கள், உணவு, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள், கல்வி மற்றும் பொழுதுபோக்கு கருவிகள், தண்ணீர் மற்றும் சுகாதாரப் பொருட்களை வழங்க 1,300 க்கும் மேற்பட்ட லாரிகளை யுனிசெஃப் தயாராக வைத்திருக்கிறது என்றும், குழந்தைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் மற்றும் கூட்டாளிகளைத் தன்னகத்தேக் கொண்டுள்ள யுனிசெஃப், ஐ.நா. மனிதாபிமான நடவடிக்கைகள் உடனடியாகவும் பாதுகாப்பாகவும் பெரிய அளவில் மீண்டும் தொடங்கப்படுவதை அனைத்து தரப்பினரும் உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# கோலாலம்பூர் மாமறைமாவட்ட திருஅவை அறிவிப்பு திருத்தொண்டர் திருநிலைக்கான அறிக்கை

## கோலாலம்பூர் மாமறைமாவட்ட திருஅவை அறிவிப்பு திருத்தொண்டர் திருநிலைக்கான அறிக்கை





குருத்துவ கல்லூரிப் பயிற்றுநர்களின் பரிந்துரையின் பேரிலும், ஆலோசனைக்குழுவினருடன் கலந்தாலோசித்தப் பிறகும், கோலாலம்பூர் மாமறைமாவட்டப் பேராயர் ஜூலியன் லியோ அவர்கள், அருட்சகோதரர் பிலிப் ஆசிர்வளம் மற்றும் அருட்சகோதரர் அந்தோனி ராப்ர்ட் பீட்டர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 2025-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 19-ஆம் நாள், புதன்கிழமை, காலை 11:00 மணியளவில், கோலாலம்பூர், புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறவிருக்கும் திருப்பலியில் திருத்தொண்டர் திருநிலைக்கு உயர்த்தத் திருவுளம் கொண்டுள்ளார்.

அருட்சகோதரர் பிலிப் ஆசிர்வளம், கோலாலம்பூர், ஜாலான் பீல், இயேசுவின் திரு இருதய தேவாலயப் பங்கினைச் சேர்ந்தவர். இவர் தற்போது ஷா ஆலம், இறை இரக்க தேவாலயத்தில் இறைபணி செய்து வருகிறார்.

அருட்சகோதரர் அந்தோனி ராப்ர்ட், ரவாங், புனித யூதா ததேயு தேவாலயப் பங்கினைச் சேர்ந்தவர். இவர் தற்போது டேசா ஜெயா, கிறிஸ்துவின் ஒளி தேவாலயத்தில் இறைப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

இருவரும் தங்களின் தத்துவ இயல் கல்வியை பினாங்கு, பொது குருத்துவக் கல்லூரியில் (2018–2019) தொடங்கி, இறையியல் கல்வியைக் கூச்சிங், புனித பேதுரு குருத்துவக் கல்லூரியில் (2021–2025) தொடர்ந்தனர்.

திருச்சபைச் சட்டம் 1051, பிரிவு 2-இன் படி, இந்த அறிவிப்பு பகிரங்கமாக வெளியிடப்படுகிறது. மேற்கூறப்பட்ட வேட்பாளர்கள் திருநிலைப்படுத்தப்படுவதற்கு ஏதேனும் திருச்சபைச் சட்டத்தடை அல்லது தகுந்த காரணம் இருப்பதாக யாரேனும் அறிந்திருந்தால், தயவுகூர்ந்து உங்கள் பங்குத் தந்தையிடமோ, மாமறைமாவட்டச் செயலகத்திடமோ, அல்லது பேராயரிடமோ தாமதமின்றித் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் (காண்க: திருச்சபைச் சட்டம் 1043).

நீங்கள் மாமறைமாவட்டச் செயலகத்தைத் தொடர்புகொள்ள chancery@archkl.org என்ற மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தலாம்.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் இறைமக்களுக்குத் திருத்தொண்டர் பணியும் சேவையும் செய்வதற்காகத் தங்களையே தயாரித்துக்கொண்டிருக்கும் அருட்சகோதரர் பிலிப் ஆசிர்வளம் மற்றும் அருட்சகோதரர் அந்தோனி ராப்ர்ட் ஆகியோருக்காக நாம் அனைவரும் செப ஆதரவைத் தொடர்ந்து வழங்குவோம்.

அருட்பணியாளர் முனைவர் கிளாரன்ஸ் தேவதாஸ்
பதிப்பாளர்,கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

## இசை சங்கமம் – ஜூபிலி ஆண்டு 2025 இசை ஒன்றுகூடல்




மரியாளின் திருநாம தேவாலயம், பெர்மாத்தாங் திங்கி பங்கில் புனித சிசிலியா தமிழ் பாடல் குழுவினரால், ஜூபிலி ஆண்டு 2025-ஐ முன்னிட்டு ஒரு சிறப்பான இசை சங்கமம் (Musical Gathering) நிகழ்வு நவம்பர் 30, 2025 அன்று தேவாலய மண்டபத்தில் நடத்தப்பட உள்ளது.

இந்த நிகழ்வு பழங்காலப் பங்குகளின் தமிழ் பாடல் குழுக்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் அனைவரையும் ஒரே மேடையில் ஒன்றிணைத்து, பாடல்களின் மூலம் இறைவனைப் புகழும், சகோதரத்துவத்தை வளர்க்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. “இசை சங்கமம்” என்பது வெறும் போட்டி நிகழ்ச்சியாக அல்ல; இது இசையின் மூலம் உருவாகும் ஒன்றுபாட்டையும், நம்பிக்கையின் பிணைப்பையும் வெளிப்படுத்தும் ஆன்மீக அனுபவமாகும்.

பங்குகளுக்கிடையேயான குழு மற்றும் தனிநபர் நிகழ்ச்சிகள், பல்வேறு இசை வடிவங்களில் நடைபெறவுள்ளன. பங்கேற்பாளர்களுக்காக பரிசுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. இதோடு, பாடல்களின் வழியே ஜூபிலி ஆண்டின் ஆன்மீக மகத்துவம் மக்களிடையே பரவச் செய்வதும் முக்கிய நோக்காகும்.

அனைவரும் தங்களின் பாடல் குழுக்கள் அல்லது தனிநபர் பெயர்களில் பதிவு செய்து, இறைவனின் அருளை இசையின் வழியே பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

## உடைந்த உள்ளம் உன்னத வேண்டுதல்

இறைவேண்டல் என்பது நமது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட கைம்பெண் உவமையை இயேசு கடந்த வாரம் கூறினார். இறைவேண்டல் மனந்தளராமல் இடைவிடாது இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய அவர், இறைவேண்டல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இவ்வாரம் கற்பிக்கிறார். கடந்த வாரம் கைம்பெண்ணை எடுத்துக்காட்டாக வைத்த இயேசு, இவ்வாரம் வரிதண்டுபவரை நம்முன் நிறுத்துகிறார்.

வரிதண்டுபவர் என்பவர் அன்றைய மக்களால் பெரும் பாவி என முத்திரை குத்தப்படு ஒதுக்கி வைக்கப்பட்டவர், வெறுக்கப்பட்டவர். அளவுக்கு அதிகமான வரி விதித்து, தமது கல்லாப்பெட்டியை நிரப்பியவர். மக்களின் துயரத்தில் சுகம் காண்பவர். இம்மாதிரியான மனிதரைக் காட்டிலும், இயேசு இன்று சொல்லும் கதையில் மற்றொரு கதாமாந்தர் நல்லவர், மேன்மையானவர், பக்திமான். மோசே வகுத்து வைத்தச் சட்டங்களை நேர்த்தியாக பின்பற்றும் பரிசேயர். ஆனால் இந்த பரிசேயரை விடுத்து, வரிதண்டுபவரை இயேசு முன்நிறுத்துவதற்கு என்ன காரணம்?

அந்த பரிசேயரின் மன்றாட்டில் இறுமாப்பும் தற்பெருமையும் மேலொங்கி இருந்தது. ஆண்டவரின் முன்னிலையில் மண்டியிடாமல் தலைவணங்கா நிலையில் பரிசேயர் தமது சுயபுராணத்தை ஒப்பிவித்தார். தமது இந்த நிலைக்கு ஆண்டவரின் ஆசீரும் இரக்கமும் காரணம் என்பதை மறந்து, தமது வாதத்தை நியாயப்படுத்தும் வகையில் மன்றாடினார். தமக்கு எல்லாம் இருக்கிறது, ஆண்டவர் தேவையில்லை என்ற நிலையில், எல்லாவற்றுக்கும் காரணம் ஆண்டவர் என்பதை அவர் மறந்தார்.

வரிதண்டுபவரோ, ஆண்டவர் முன்னிலையில் நிற்க தகுதியற்றவராக, வானத்தை அண்ணாந்து பார்க்கத் துணியாமல் தொலைவில் நின்றார். காசு பணம் இருந்தாலும், தமது நிலையற்றத் தன்மையைப் புரிந்து, ஆண்டவரின் முன் அகதியாய் நின்றார். கைவிடப்பட்ட தமது வாழ்வில் ஆண்டவர் தேவை என்று உணர்ந்தவராய் மன்றாடினார். வரிதண்டுபவர் பாவி என்பதை மறுக்கவில்லை. “கைவிடப்பட்டோரின் வேண்டுதலைப் (ஆண்டவர்) புறக்கணியார்” (சீராக்35:14). ஏனெனில் அவரிடம் ஒருதலைச்சார்பு என்பதே கிடையாது என முதல் வாசகம் கூறுகிறது.

இவ்விருவரின் வேண்டுதல்களிலும் பரிசேயரின் வேண்டுதலோ வார்த்தை வித்தையால் நிரம்பியிருந்தது. வாரத்தில் இருமுறை நோன்பு இருக்கிறேன், வருவாயில் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன், நேர்மையாக நடந்து கொள்கிறேன், அதனால் ஆண்டவர் எனது வேண்டுதலைக் கேட்க வேண்டும் என்ற தலைக்கணத்தோடு சமர்ப்பித்தார். வரிதண்டுபவரின் வேண்டுதலோ எளிமையாக இருந்தது. இன்றைய திருப்பாடல் கூறுவது போல், உடைந்த உள்ளத்தோடு, நைந்த நெஞ்சத்தோடு தமது வேண்டுதலை வரிதண்டுபவர் சமர்ப்பித்தார் (திபா.34:18).

உண்மைதான், பயபக்தியிலும் திருப்பணிகளிலும் பரிசேயர் முன்னுக்கு நிற்கிறார். ஆண்டவரின் இரக்கப் பெருக்கத்தை நாடும் வரிதண்டுபவர் தொலைவில் நிற்கிறார். நாம் எங்கு நிற்கிறோம்? “பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்... நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” (மத்.9:13) என்கிறார் ஆண்டவர். நமது உடைந்த உள்ளத்தை உருக்கத்தோடு ஆண்டவரிடம் ஒப்புக்கொடுப்போம்.

அந்தோணி இன்னாசி – சைபர்ஜெயா

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.